


# 19.05.2026 செய்திகள்

## டிரம்ப்பை எப்படி எதிர்கொண்டார் ஜின் பிங் ?

- பெய்ஜிங் நகரின் மக்கள் மாமன்றத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பை வரவேற்றார் சீன அதிபர் ஷி ஜின் பிங். "இந்தச் சந்திப்பை உலகமே உற்றுநோக்குகிறது".

» அமெரிக்க-சீன உறவு

- 1972இல் நிகழ்ந்த நிக்ஸன் – மாவோ சந்திப்பு அமெரிக்க – சீன உறவில் ஒரு புதிய தொடக்கத்துக்கு வழிவகுத்தது. 80களில் சீனா தனது கதவுகளை அகலத் திறந்தது. பன்னாட்டு மூலதனம் குவிந்தது. சீனா உலகின் தொழிற் சாலையாக உருவானது.
- 1990இல் அமெரிக்காவின் உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி), சீனாவைவிட 15 மடங்கு அதிகமாக இருந்தது. (1990 ஜிடிபி, பில்லியன் டாலரில், அமெரிக்கா 5,963, சீனா 360, இந்தியா 321). 2025இல் அது வெறும் 1.5 மடங்காகச் சுருங்கிவிட்டது. (2025 ஜிடிபி, பில்லியன் டாலரில், அமெரிக்கா 30,767, சீனா 19,626, இந்தியா 3,916).
- சீன-அமெரிக்க உரசல்களில் மூன்று அம்சங்கள் குறிப்பிடத்தக்கன. அவை: வணிகம், தொழில்நுட்பம், தைவான். இதை நோக்கர்கள் 3T's என்பர் (Trade, Technology, Taiwan). இவற்றுடன் இப்போது நான்காவதாக ஈரானும் சேர்ந்துகொண்டது. இந்த நான்கு அம்சங்களும் இந்த முறை உரையாடலில் இடம்பெற்றன.
- அமெரிக்கா, சீனாவிடமிருந்து 308 பில்லியன் டாலர் பெறுமதியான பொருள்களைப் பெறுகிறது. பதிலுக்கு, 106 பில்லியன் டாலர் பொருள்களை மட்டுமே அமெரிக்காவால் ஏற்றுமதி செய்ய முடிகிறது. இது சீனாவுக்குச் சாதகமான மிகை வணிகம் (trade surplus). இந்த 202 பில்லியன் டாலர் இடைவெளியைக் குறைக்க அமெரிக்கா முயல்கிறது.

» தொழில்நுட்பம்

- உற்பத்தித் துறையில்தான் சீனா முன்னணியில் இருந்துவந்தது. எனில், கடந்த 10 ஆண்டுகளில் "உயர் தொழில்நுட்பம் சார்ந்த சூரிய ஆற்றல், செயற்கைக்கோள், மின் வாகனங்கள், செயற்கை நுண்ணறிவு முதலான துறைகளில் அதி விரைவாக முன்னேறியிருக்கிறது.
- தொழில்நுட்பத் துறையில் சீனாவின் இந்த வளர்ச்சிக்கு அது ஆய்வுப்புலத்தில் (R&D) செய்துவரும் முதலீடே முதன்மைக் காரணி எனலாம். கால் நூற்றாண்டுக்கு முன்பு அமெரிக்காவைவிடப் பல படிகள் பின்னால் இருந்த சீனாவின் முதலீடு, 2024இல் அமெரிக்காவை விஞ்சிவிட்டது.
- சீனாவின் தொழில்நுட்பச் சந்தையில் அமெரிக்கா ஊடுருவ வேண்டும் என்பது டிரம்ப்பின் அவா. அவர் தன்னுடன் எலான் மஸ்க் (டெஸ்லா), டிம்குக் (ஆப்பிள்), ஜென்சன் ஹுவாங் (என்விடியா) முதலான 17 தொழில்நுட்ப ஜாம்பவான்களை அழைத்துச் சென்றார். இவர்கள், சீன நிறுவனங்களுடன் சில ஒப்பந்தங்களை மேற்கொண்டு இருப்பதாகவும், அதன் விவரங்கள் விரைவில் வெளியாகும் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

» தைவான், ஈரான், இந்தியா

- சீனாவுக்கு அருகிலுள்ள தீவு தைவான். "தைவான், சீனாவின் ஒரு பகுதி, அது இடையில் பிரிந்தது, மீண்டும் இணைப்போம்" என்பதுதான் சீனாவின் நிலைப்பாடு. ஆனால், சீனாவில் ஓர் அங்கமாக இருக்க மறுக்கிறது தைவான்.
- அமெரிக்கா, தைவானை ஆதரிக்கிறது; ஆயுதங்களும் வழங்குகிறது. இவ்விரண்டையும் அமெரிக்கா நிறுத்த வேண்டும் என்பது சீனாவின் கோரிக்கை. இந்தச் சந்திப்பின் நிரலில் தைவானும் இருந்தது. ஆனால் உரையாடலின் முடிவில் வெளியான அமெரிக்க அறிக்கையில் தைவான் இடம்பெறவில்லை.

- வெற்றி பெற முடியாத ஒரு போரில் சிக்கிக் கொண்டு வெளியேறும் வழி தெரியாது திணறுகிறார் டிரம்ப். இதுகாறும் ஈரான் போர் குறித்து சீனா அடக்கியே வாசித்தது. "உனது எதிரி தொடர்ந்து தவறிழைக்கும்போது, நீ ஒதுங்கி இரு" என்கிற புகழ்பெற்ற வாசகத்தைச் சொன்னவர் நெப்போலியன் என்பார்கள். ஷி இதைப் படித்திருப்பார். ஹார்முஸ் நீரிணையை ஈரான் திறந்துவிட வேண்டும்; அதற்குச் சீனா தனது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்; இது டிரம்ப்பின் கோரிக்கை. ஈரானுடன் பேசுவதற்கு ஷி சம்மதித்து இருப்பதாகத் தெரிகிறது.
- நீண்ட காலமாகவே, தனது சீன எதிர்ப்புக்கு ஆசியாவில் பெரிய சக்தியாக விளங்கும் இந்தியாவைப் பயன்கொண்டது அமெரிக்கா. டிரம்ப் பதவியேற்றதும் இந்தக் கண்ணோட்டத்தில் மாற்றம் வந்தது. இந்தச் சந்திப்பில் அது இன்னும் துலக்கமானது. மாறிவரும் புவிசார் சூழலுக்கேற்ப இந்தியா தனது பாதையைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும்.
- நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் இந்தியாவுடன் ஒரே மட்டத்திலிருந்த சீனா இன்று உலகின் இரண்டாவது பெரிய சக்தியாக உயர்ந்திருக்கிறது. இந்தியாவாலும் இது முடியும். நமது மனித வளத்தை நாம் மேம்படுத்த வேண்டும். கல்வியிலும் மருத்துவத்திலும் கவனம் செலுத்த வேண்டும். அறிவியல் மனப்பான்மையை வளர்த்தெடுக்க வேண்டும். சாதி, மதச் சண்டைகளை விட்டொழிக்க வேண்டும்.

## தகவல் அறியும் உரிமைச் சட்ட வரம்புக்குள் பிசிசிஐ வராது : சிஐசி

- பிசிசிஐ என்பது தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னாட்சியான தனியார் அமைப்பாகும்.
- அரசியல் சாசனம், நாடாளுமன்றம், மாநில சட்டப்பேரவை அல்லது அரசு அறிவிக்கை மூலம் அந்த அமைப்பு ஏற்படுத்தப்படவில்லை.
- கிரிக்கெட் நிர்வாகம் மற்றும் சர்வதேச போட்டிகளில் இந்தியாவின் பிரதிநிதித்துவம் தொடர்பான முக்கிய பொதுப் பணிகளை பிசிசிஐ மேற்கொண்டாலும், அது அரசுக்குச் சொந்தமானதோ, அரசு கட்டுப்பாட்டிலோ இல்லை.
- அத்துடன் அது அரசின் நிதியுதவியையும் பெறவில்லை.
- கிரிக்கெட் போட்டிக்கான டிக்கெட் விற்பனை, போட்டி ஒளிபரப்பு ஒப்பந்தங்கள், ஊடக உரிமைகள் உள்ளிட்டவை மூலம் வருவாய் ஈட்டி சுதந்திரமான அமைப்பாக பிசிசிஐ செயல்படுகிறது.
- தகவல் அறியும் உரிமைச் சட்டப் பிரிவு 2(ஹெச்)-இன் கீழ், பிசிசிஐ-யை பொது அதிகார அமைப்பு என்று வரையறுக்க முடியாது.
- இதன்மூலம், பிசிசிஐ பொது அதிகார அமைப்பு என்று கடந்த 2018-ஆம் ஆண்டு அப்போதைய தகவல் ஆணையர் எம்.ஸ்ரீதர் ஆச்சாரியாலுவின் உத்தரவை தற்போது மத்திய தகவல் ஆணையம் மாற்றியுள்ளது.

## ஸ்வீடன் பயணத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள்

- இந்தியா ஸ்வீடன் இடையேயான இருதரப்பு உறவு, அடுத்த கட்டமான, வியூகக் கூட்டாண்மை என்ற அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு உள்ளது. மேலும், 2026-30 கால கட்டத்திற்கான கூட்டு அறிக்கை மற்றும் கூட்டு திட்டத்துக்கும் இரு நாடுகளும் ஒப்புதல் அளித்துள்ளன.
- இரு நாடுகளும் இணைந்து, "இந்தியா - ஸ்வீடன் கூட்டு கண்டுபிடிப்பு கூட்டாண்மை 2.0" திட்டத்தை துவங்கி உள்ளன. இதன் கீழ், இணையவழி வாயிலாக செயல்படும். "இந்தியா – ஸ்வீடன் கூட்டு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையம்" நிறுவப்படவுள்ளது.
- இந்த மையம் செயற்கை நுண்ணறிவு, 6ஜி, குவாண்டம் கம்ப்யூட்டிங், தாதுக்கள், விண்வெளி ஆராய்ச்சி போன்ற அதிநவீன தொழில்நுட்பங்களில் கூட்டு ஒத்துழைப்பை வலுப்படுத்தும். மேலும், புதுப்பிக்கத்தக்க ஆற்றல், ஸ்மார்ட் சிட்டிகள், நீர் மேலாண்மை ஆகியவற்றிலும் கவனம் செலுத்தும்.
- வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் நீண்ட கால ஒத்துழைப்பை உறுதி செய்ய, "இந்தியா – ஸ்வீடன் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு வழித்தடம்" என்ற புதிய முயற்சி துவங்கப்பட்டு உள்ளது.

SURESH'